[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 30

பாதுகாத்து நீதிநெறி தவறாது இந்த நாடும், இந்த உலகமும் போற்றி வாழ்த்துகின்ற புனித ஆட்சி நடத்தி வருகின்ற எங்கள் உயிருக்கும் மேலான தெய்வத் தலைவியே, வாழும் பசும்பொன்னே, மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் சுண்டுவிரல் நீட்டி சுட்டிக்காட்டுகின்ற திசையிலே இந்த உலகம் பயணிக்கும் அந்தப் பொன்னான நாள் வெகு விரைவிலே மலரும், மலரும் என சூளுரைத்து தாயே, அம்மா, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 2013–2014 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 96–வது அறிக்கையை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டின் முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், பதிலுரையும் மற்றும் வாக்கெடுப்பும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் துணை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் எதிர்த் தரப்பில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கின்றார்கள். தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் கடைசியாகப் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றதற்காக தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

நண்பகல் 12–00

பொதுவாக, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் 3 கருத்துகளைக் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். முதலாவதாக